பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 192 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 15 புதன்கிழமை (29.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

இன்று கொடியேற்றம்



ஜூலை 10ஆம் திகதிவரை

## எரிபொருள் வரிசையில் மக்கள் நிற்க வேண்டாம்

யாழ்.மாவட்ட அரச அதிபர்



(கொழும்பு)

அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு மாத்திரம் ஜூலை 01 முதல் 10ஆம் திகதி வரை எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் அறி ▷15

இலங்கையின் எரிபொருள் நெருக்கடிக்கு

## தீர்வு காண்பது தொடர்பில்

கட்டார் எரிசக்தி அமைச்சருடன் காஞ்சன கலந்துரையாடல்



(டோகா)

இலங்கையின் எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கட்டாரின் எரிசக்தி துறையின் முக்கிய அதிகாரி ▷15

எரிபொருள் இன்மையால்

# நாடு முழுவதும் செயலிழந்தது

பிரதான வீதிகள் அனைத்தும் வெறிச்சோடிப் போயுள்ளன

*(கொழும்பு)*

நாட்டில் எரிபொருளுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நாடு முழுவதுமே செயலிழந்து காணப்படுகின்றது.

வாகன நெரிசல் அதிகமாகக் காணப்படும் அனைத்து வீதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன. *(15ஆம் பக்கம் பார்க்க)*

## அனைவருக்கும் தொடர்ந்து எரிபொருள் விநியோகம்

லங்கா ஐஓசி நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

அனைவருக்கும் எரிபொருளை தொடர்ந்து விநியோகிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதாக லங்கா ஐஓசி நிறுவனத்தின் முகாமையாளர் குப்தா அறிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத் ▷15

## நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில்

ஜப்பான் தூதுவருடன் கூட்டமைப்பு கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் சமகால நிலைமை தொடர்பில் ஜப்பான் தூதுவருடன் தமிழ்த் தேசி ▷15

பலாலி விமான நிலையத்தின்

## தொழிற்பாடுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கு இடையிலான தொழிற்பாடுகளை எதிர்வரும் 1ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள படிமுறைகளுக்கு அமைச்சரவை உடன்பாடு வெளியிட்டுள்ளது.

தென்னிந்திய விமான நிலையம் ▷15

## இலங்கைக்கு மேலதிக உதவியாக 20 மில்லியன் டொலர்கள் வழங்கப்படும்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவிப்பு



(முனிச்)

இலங்கையில் உணவுப் பாதுகாப்பினை பலப்படுத்துவதற்காக மேலதிக உதவியாக இலங்கைக்கு 20 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்றைய ஜி-7 உச்சிமாநாட்டில் அறிவித்தார்.

அமெரிக்கா மேற்கொண்ட ஏனைய சமீபத்திய நிதியளிப்பு அறிவிப்புகளின் தொடராக மேற் ▷15

## இலங்கையின் உணவுப் பாதுகாப்பை இந்தியா உறுதி செய்கின்றது

ஜி - 7 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி



(முனிச்)

இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக உதவிகளை இந்தியா வழங்கி வருவதாக ஜி - 7 மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜி-7 உச்சி மாநாட்டில் இந்திய பிரதமர் இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி குறித்து குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா இலங்கையின் உணவுபாதுகாப்பை ▷15



பஸ் இன்மையால் உழவு இயந்திரத்தில் பாடசாலை செல்லும் மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்தியாவிலிருந்து பொருட்களை இறக்குவதற்கு படகுகள் தயார்

## நாணய மாற்று விடயத்தில் சிக்கல் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இந்தியாவிலிருந்து பொருட்களை கொண்டு வருவதற்கு நாணய மாற்று விடயத்தில் மாத்திரமே சிக்கல் காணப்படுவதாகவும் பொருட்களை ஏற்றி வர படகுகள் தயாராக உள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் பற்றாக்குறை நாட்டில் நிலவுவதால், அத்தியாவசிய தேவைகளை முன்னெடுப்பது என்ற தீர்மானம் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு பின்னர் நிலைமை வழமைக்கு திரும்பிவிடும் எனும் அடிப்படையில்தான் அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நான் கூறிவருவது போன்று இந்தியாவிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதன் ஊடாக வடக்கு மாகாணம் அதற்கு மேலாக வடமத்திய மாகாணம் நன்மையைப் பெறும். அது விரைவில் நடைபெறும் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து பொருட்களை ஏற்றி வருவது தொடர்பில் அமைச்சரவையில் ஆதரவு கிடைத்துள்ளதா என ஊடகவியலாளர் வினவினார். பதிலளித்த அமைச்சர் கூறுகையில்,

அதில் எவ்விதமான தடையும் இல்லை. க்டைசியாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்று கூறப்பட்டது. அதுவும் பெறப்பட்டுள்ளது.

ஆனால், நாணய மாற்று விடயத்தில் மாத்திரமே இழுபறி நிலை காணப்படுகின்றது. அதனை சீர்செய்வோமாக இருந்தால் எந்த நேரத்திலும் சரிவரும். அதற்காக படகுகள் தயார் நிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-100,316)

---

### உயர்தர பரீட்சைக்கான

# செயன்முறைப் பரீட்சை இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை செயன்முறை பரீட்சைகளுக்கான திகதி பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் பொறியியல் தொழில்நுட்பப் பாடத்திற்கான செயன்முறைப் பரீட்சைகள் இன்று முதல் ஜூலை 09ஆம் திகதி வரை நடாத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

---

# ஹிருணிகாவை தடுத்து நிறுத்திய பொலிஸார்

(கொழும்பு)

குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்குச் சென்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவு தலைவி ஹிருணிகா பிரேமச்சந்திரவை பொலிஸார் செல்லவிடாது தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான தரிந்து உடுவரகெதரவை குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பாணையை கண்டித்து நேற்று கொழும்பு கோட்டையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஹிருணிகா சென்றிருந்தார்.



குற்றவியல் விசாரணை திணைக்களம் அமைந்துள்ள இடத்தில் இருந்து பல மீற்றர் தூரத்தில் பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி ஹிருணிகாவைத் தடுத்து நிறுத்தினர். (ம)

---


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர் திருமதி

## சிவநேசன் சோதிமலர்

(மாமனிதர் சிவநேசன் அறக்கட்டளை நிறுவுனர்)

**திதி நிர்ணயம்**

சுப கிருது வருடம் நிகழும் வைகாசியில்
சர்திதி பூர்வ பட்ஷ துதியை தன்னில்
நேர்மையிலும் மேன்மையுடன் நிறைவாகி சோதிமலர்
இந்நாநிலத்தில் வாழ்ந்தகன்று இறைபதமுற்றாள் இயம்பு.

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து வைகாசி (31.05.2022) செவ்வாய்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி சி.சோதிமலர் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 28.06.2022 செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணிக்குக் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்று, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் 30.06.2022 வியாழக்கிழமை யார்க்கரு, கரவெட்டி கிழக்கில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று எமது இல்லத்திற்கு வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

+94 212264145, +94 774234194, +94 778990131 (C-4552)

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் கப்பல் மேலும் தாமதமாகும்

## கைவிரித்தார் காஞ்சன

**(கொழும்பு)**
**பெற்றோல், டீசல் மற்றும் மசகு எண்ணெய் கப்பல்களின் வருகை மேலும் தாமதமடையுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

குறிப்பிட்ட திகதியில் எரிபொருள் விநியோகிப்பதில் உள்ள சிரமம் தொடர்பில் விநியோகஸ்தர்களால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த எரிபொருள் கப்பல் நாட்டை வந்தடைந்து தரையிறக்கப்படும் வரை, எரிபொருள் விநியோகத்தின் போது பொது போக்குவரத்து, மின் உற்பத்தி மற்றும் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.



அடுத்த வாரத்திற்குள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் டீசலும் பெற்றோலும் விநியோகிக்கப்படும்.

எனவே, எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போதைய நிலையில் எரிபொருள் கப்பல்கள் வரும் திகதியை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் உறுதிப்படுத்த முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த மசகு எண்ணெய் கப்பல் வரும் வரை எரிபொருள் சுத்திகரிப்பு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 47 பேர் கடற்படையால் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 47 பேர் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 47 பேரும் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றபோது நீர்கொழும்பு பகுதியில் மீன்பிடி படகு மூலம் செல்ல முயன்ற நிலையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (நி)

## எரிபொருளுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய வங்கி இணக்கம்

(கொழும்பு)

எரிபொருள் கொள்வனவிற்கு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி முன்வந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசேகர எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களிற்கு மிகவும் இறுக்கமான முறையில் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு இணங்கியுள்ளார்.

கையிருப்பில் உள்ள நிதியை பயன்படுத்தி எரிபொருள் கொள்வனவில் ஈடுபடுமாறு ஜனாதிபதி நேற்று முன்தினம் அதிகாரிகளிற்கு உத்தரவிட்டிருந்தார்.

நாட்டிற்கு எரிபொருளை இறக்குமதி செய்யும் விநியோகிக்கும் நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தைகளின் போது ஜனாதிபதி இதனை தெரிவித்திருந்தார். எரிபொருள் விநியோகத்தை மீள ஆரம்பிப்பதற்கு மத்திய வங்கி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஊடாக எரிபொருளை வழங்குவதற்கான இணக்கப்பாடும் இந்த சந்திப்பில் எட்டப்பட்டது. (நி)

## எரிபொருளை இறக்குமதி செய்ய வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி

(கொழும்பு)

எரிபொருளை உற்பத்தி செய்யும் நாடுகளின் நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருளை இறக்குமதி செய்யவும், சில்லறை விற்பனையில் ஈடுபடுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டில் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## கோட்டா ஜனாதிபதியாக இருக்கும் வரை எந்த நாடும் இலங்கைக்கு உதவ முன்வராது

### பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல

(கொழும்பு)

நாடு அறிவிக்கப்படாத முடக்கல் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளும் பல்கலைகழகங்களும் மூடப்பட்டுள்ளன, மருந்துப்பொருட்களிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது, அரச சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ள அவர் கட்டுப்பாடுகள் இல்லாததால் அத்தியாவசியப்பொருட்கள் பல பகுதிகளில் நினைத்த விலைக்கு விற்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.



அரசாங்கம் பதவி விலகி மக்களின் புதிய ஆணையை பெறுவதற்காக தேர்தலை நடத்த வேண்டும் என தெரிவித்துள்ள அவர் ஜனாதிபதி பதவியில் கோட்டாபய ராஜபக்ஷ நீடிக்கும் வரை எந்த நாடும் இலங்கைக்கு உதவி வழங்காது எனவும் தெரிவித்துள்ளார். (நி)

## சுகாதார தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட 8 இடைநிலை சுகாதார தொழிசங்கத்தினர் இன்றும் நாளையும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளனர் என இடைநிலை சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் உபுல் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## தொடருந்து கட்டணத்தை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

தொடருந்துக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தினால் இலங்கை தொடருந்து திணைக்களத்தின் தொடர்ச்சியான நட்டங்கள் மேலும் அதிகரித்து, உரிய சேவையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம், தொடருந்து கட்டணங்கள் திருத்தப்பட வேண்டிய அவசியம் தற்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் திருத்தம் செய்யப்படாத தொடருந்து கட்டணத்தை உயர்த்துவதற்கான யோசனை அமைச்சரவையிடம் முன்வைக்கப்பட்டது.


போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

## வெறிச்சோடிய கொழும்பு வீதிகள்

(கொழும்பு)

தனியார் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்ததை அடுத்து கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் சன நெரிசல் அதிகமாக காணப்படும் வீதிகள் வெறிச்சோடி போயுள்ளன.

ஏனைய வேலை நாட்களில் கடும் போக்குவரத்து நெரிசல் காணப்படும் தெமட்டகொடை மற்றும் நுகேகொடை பிரதேசங்களில் நேற்று அதிகாலை வீதிகளின் வாகனங்கள் மிகக் குறைவாக காணப்பட்டதுடன் மக்கள் நடமாட்டமும் வெகுவாக குறைந்து காணப்பட்டது.



நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருக்கும் சொற்பளவிலான எரிபொருளை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் விநியோகிக்கப்பது என அரசாங்கம் தீர்மானித்தது.

அரசாங்கத்தின் அறிவிப்பு நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளதால், நாடு முழுவதும் வீதிகளில் வாகன போக்குவரத்து, மக்களின் நடமாட்டங்கள் வெகுவாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியது மேற்கிந்திய தீவுகள்

மேற்கிந்திய தீவுகள்-பங்களாதேஷ் அணிகள் மோதும் 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கிராஸ் ஐலெட் மைதானத்தில் நடைபெற்றது.



பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் 234 ரன்னில் "ஓல் அவுட்" ஆனது. மேற்கிந்திய தீவுகள் முதல் இன்னிங்ஸில் 408 ரன் குவித்தது. கெய்ல் மேயர்ஸ் 146 ரன்கள் எடுத்தார்.

174 ரன்கள் பின் தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய பங்களாதேஷ் 3 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 132 ரன் எடுத்திருந்தது.

நேற்று முன்தினம் 4 ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது.


தொடர்ந்து ஆடிய பங்களாதேஷ் 186 ரன்னில் சுருண்டது. இதனால் மேற்கிந்திய தீவுகளுக்கு 13 ரன் மட்டுமே இலக்காக இருந்தது.

நுருல்ஹசன் அதிகபட்சமாக 60 ரன் எடுத்தார். கேமர்ரோச், அல்ஜாரி ஜோசப், ஜெய்டன் சீல்ஸ் தலா 3 விக்கெட் வீழ்த்தினார்கள். மேற்கிந்திய தீவுகள் அணி 2.5 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 13 ரன் எடுத்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஏற்கனவே முதல் டெஸ்டிலும் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருந்தது. இதனால் 2-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாக கைப்பற்றியது.

ஆட்டநாயகனாகவும் தொடர் நாயகனாகவும் கைல் மேயர்ஸ் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து இரு அணிகளும் இருபது-20 தொடரிலும் ஒருநாள் தொடரிலும் மோத உள்ளது. முதல் இருபது-20 போட்டி ஜூலை 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (4)

# ஓய்வை அறிவித்தார் இயோன் மோர்கன்



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் இயோன் மோர்கன் அறிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியின் தலைமைப்பொறுப்பினை ஏற்ற அவரின் தலைமைத்துவத்தின் கீழ் இங்கிலாந்து அணி 2019 ஆம் ஆண்டு முதலாவது உலக கிண்ணத்தினை சுவீகரித்துக் கொண்டது.

எனினும் இந்த வருடத்தில் தொடர்ச்சியாக அவருக்கு ஏற்பட்ட வலது கால் தசைப்பிடிப்பு காரணமாக பெரும் சிரமத்தை எதிர் நோக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் தீர்மானத்தினை அவர் எடுத்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2650

**சந்தியா**

இன்று கை
கொடுக்க யாரும்
இல்லையே என்று
கவலைப்படாதே
கைதட்ட உலகமே
காத்திருக்கிறது



**பிரதீப்**

மனதில் உறுதியோடு
ஒவ்வொரு நாளும்
உங்கள் இலக்கை
நோக்கி
ஒரு அடியாவது
எடுத்து வையுங்கள்
கண்டிப்பாக ஒருநாள்
விருப்பியதை
அடைந்து விடுவீர்கள்

**கஸ்தூரி**

வயதான பெற்றோரும்
சில நேரங்களில் குழந்தைகளே.
அவர்களிடம் நாம் பெற்ற
அன்பையும் கவனிப்பையும்
திரும்ப செலுத்த வேண்டிய
நேரம் இது

**லோஜிசன்**

உலகில்
அனைத்திற்கும்
ஒரு முடிவுண்டு-
உங்கள்
பிரச்சனைகளுக்கும்
தான்....
நம்பிக்கை
இழக்காதீர்கள்

**வேதிஜா**

வெற்றிக்கான
விருப்பம் மட்டுமே
போதுமானது அல்ல
அதற்காக தயாராவதும்
அவசியம்

**துவாரகன்**

பெரும்பாலானோர்
ஏற்றுக் கொள்வதால்
மட்டுமே ஒரு விடயம்
உண்மையாகவோ
சரியானதாகவோ
ஆகிவிட முடியாது.
பல நேரங்களில்
உண்மை கசப்பாகவும்
ஏற்றுக் கொள்ள
கடினமாகவும் இருக்கும்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் பெற்றுத்தரக் கோரி பொதுமக்கள் மாவட்டச் செயலகத்தில் கூடி போராட்டம்

(முறிகண்டி)

**கிளிநொச்சியில் எரிபொருள் பெற்றுத்தரக்கோரி பொதுமக்கள் சிலர் மாவட்ட செயலகத்தில் கூடி போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

குறித்த போராட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மாவட்ட செயலகத்தில் சத்தியாக்கிரக போராட்டமாக முன்னெடுத்தனர்.

இதன்போது, மாவட்ட செயலக அதிகாரிகள் அவர்களுடன் கலந்துரையாடினர்.

5 நாட்களாக எரிபொருள் பெற்றுக்கொள்ள காத்திருக்கும் எமக்கு 1 லீற்றர் பெற்றோலாவது தாருங்கள் என அவர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

சிலர் மாவட்ட செயலகத்தில் அனுமதி பெற்றதாக கூறி எரிபொருள் பெற்று செல்கின்றனர்.

அது போன்று தாம் வீடு செல்வதற்கு எரிபொருள் தருமாறு கூறியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவ சேவை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைக்கு மாத்திரமே இருப்பில் உள்ள எரிபொருளிலிருந்து மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்



பட்டு வருவதாக மாவட்ட செயலக அதிகாரிகள் இதன்போது அறிவுறுத்தினர்.

இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். (4-100)

# இ.போ.ச.ஊழியர்களுக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை

(அராலி)

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியர்கராஜாவின் தலையீட்டினால் இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய சாலைகளில் கடமையாற்றும் சாரதி மற்றும் காப்பாளர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவது. இலங்கை போக்குவரத்துச் சபையின் வட மாகாணத்தில் உள்ள ஏழு சாலைகளில் கடமையாற்றும் சாரதி மற்றும் காப்பாளர்கள் கடமைக்கு செல்வதற்கு எரிபொருள் வழங்கவில்லை என ஊடக சந்திப்பை நடத்திய நிலையில் வடமாகாண ஆளுநர் குறித்த விடயம் தொடர்பில் கரிசனை செலுத்தியுள்ளார்.

இதன் பிரகாரம் வடமாகாண ஆளுநர் இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாண பிரதான முகாமையாளரை தொடர்புகொண்டு போக்குவரத்து சேவை அத்தியாவசிய தேவையாக கருதப்படுகின்ற நிலையில் தடையின்றி மேற்கொள்வதற்கு சாரதி காப்பாளர்கள் கடமைக்கு செல்வதற்கான எரிபொருளை வழங்குவதற்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடுமாறு தெரிவித்திருந்தார்.


இந்நிலையில் வட பிராந்திய பிரதி முகாமையாளர், மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வடமாகாண பெற்றோலிய கூட்டுத்தாபன முகாமையாளருக்குமிடையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முல்லைத்தீவைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு முள்ளியவளை எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் வழங்கப்படும் அதேவேளை மன்னார் சாலையை சேர்ந்தவர்களுக்கும் மன்னாரில் எரிபொருள் வழங்கப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை எரிபொருள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் வவுனியா மாவட்ட அரச அதிபரினால் மேற்கொள்ளப்பட்டது.

அதேபோல் யாழ்.மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கும் எரிபொருள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (4-104)

# காரைநகரில் காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்



(அராலி)

காரைநகர் ஜே/45 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள தனியாருக்கு சொந்தமான 40 ஏக்கர் காணியினை கடற்படையினரின் தேவைகளுக்கு அளவிடுவதற்கு நேற்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

நில அளவை திணைக்களம் குறித்த பகுதிக்கு வருகை தந்தவேளை அங்கு ஒன்று கூடிய அரசியல் பிரமுகர்கள், சமூக மட்ட அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து நில அளவை முயற்சியை முறியடித்தனர்.

இதன்போது கடற்படையினருக்கு காணி வழங்க முடியாது என தெரிவித்து நில அளவை திணைக்களத்திற்கு எதிர்பு தெரிவித்தவர்களால் எழுத்து மூலமான ஆவணம் வழங்கப்பட்டது. இதனையடுத்து நில அளவை திணைக்களம் அங்கிருந்து அகன்று சென்றது.

மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்ற இந்த இக்கட்டான சூழ்நிலையில் நில அளவை திணைக்களத்தின் காணி அபகரிப்பு நடவடிக்கைகளானது அனைவர் மத்தியிலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (4-104)

# இராசிபலன்

**29.06.2022**
**ஆனி 15, புதன்கிழமை**
**அமாவாசை முற்பகல் 8.27 மணிவரை**
**திருவாதிரை முன்னிரவு 10.28 மணிவரை**

**சுபநேரம் 4.26-5.56 மணிவரை**
**இராகுகாலம் 11.56-1.26 மணிவரை**
**நயினை நாகபூஷணி அம்மன் கொடியேற்றம்**

**சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை**

**வளவன்**




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழிலில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், சகோதர வழியில் ஒற்றுமை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.




எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் சற்று அதிகரிக்கும்.




பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.




உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், அலங்கார பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் கூடும், காரிய அனுகூலமுண்டு.




மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், இயல்பான வாழ்வில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.




சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.




குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணம் ஒன்று அமையலாம், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள். உள்ளத்தில் அமைதி கூடும் நாள்.




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, வியாபார விருத்தியுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள்.




உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மனம் எப்போதும் முன்னோக்கிச் செல்லட்டும்

## வடமராட்சி கிராம உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி நேற்று செவ்வாய்க்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்

சுகயீன விடுப்பு போராட்டத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஈடுபட்ட போதிலும் தமக்கான தீர்வு கிடைக்க பெறாததால் தாம் தொடர்ந்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், தமக்கான தீர்வு கிடைக்கும்வரை பணியை தொடர மாட்டோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.(4-33-18)

# கடவுச்சீட்டை ஒரேநாளில் பெறும் சேவை விரைவில் யாழிலும்

## அமைச்சர் தம்மிக்க பெரேரா

(யாழ்ப்பாணம்)

கடவுச்சீட்டு ஒருநாள் சேவை துரிதப்படுத்தப்படும் என அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார். இதற்காக யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை ஆகிய பிராந்திய அலுவலகங்களிலும் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் என்வும் அவர் தெரிவித்தார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்முதல் கட்டமாக, யாழ்ப்பாணத்தில் உள்ள குடிவரவு குடியகல்வு அலுவலகத்தில் தனது பிரத்தியேகப் பணத்தை முதலீடு செய்து ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார். தற்போது கடவுச் சீட்டைப் பெறுவதற்கும் நீண்ட வரிசையில் காத்திருப்பதாகவும், இந்த நிலைமையை மாற்றியமைப்பதாகவும் இதனைத் தவிர மேலும் ஐந்து இடங்களில் பிராந்திய அலுவகங்களையும், ஒருநாள் சேவையையும் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (4)

## காணாமல் போன மாணவன் வீடு திரும்பினான்

### கடத்த முற்பட்ட போது தப்பித்ததாக தெரிவிப்பு


(சாவகச்சேரி)

நாவற்குழி தச்சன்தோப்பு பகுதியைச் சேர்ந்த 18வயதான மாணவன் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமல் போயிருப்பதாக அவரது தாயாரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் குறித்த மாணவன் வீடு வந்து சேர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவனிடம் மேற்கொண்ட விசாரணையில் வான் ஒன்றில் தன்னை இனந் தெரியாத நபர்கள் கடத்திச் சென்ற நிலையில் அநுராதபுரம் பகுதியில் குறித்த வான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது அதிலிருந்து தப்பித்து பேருந்தில் ஏறி வீடு வந்து சேர்ந்திருப்பதாகத் தெரிவித்திருந்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் சிறுப்பிட்டியைச் சேர்ந்த விவசாயிகளுக்குச் சிறுதானியவிதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.



வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக இடம்பெற்றது.

(படம் - ரவிசாந்)

### கட்டப்பிராய் முத்து மாரியம்மன் ஆலய மஹோற்சவம்

(இருபாலை)

யாழ். இருபாலை கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி மஞ்சள் திருவிழாவும் 14 ஆம் திகதி காலை இரதேசாற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. மஹோற்சவத்தை முன்னிட்டு சமய அறிவுப் போட்டியும் வழமை போல் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-136)

### கோண்டாவில் ஆசிமடப் பிள்ளையார் மஹோற்சவம்

(குப்பிழான்)

கோண்டாவில் கிழக்கு ஆசிமடப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் நடைபெறும்.

இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை தேர்த்திருவிழாவும், 6 ஆம் திகதி புதன்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (4-18)

### அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

குப்பிழான் வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற பகல் 3 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் 11 தினங்கள் அலங்கார உற்சவம் இடம்பெற்று எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு விசேடமாக 108 சங்காபிஷேகத்துடன் அலங்கார உற்சவம் நிறைவு பெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-108)

## தமிழ் பொலிஸாருக்கு சிங்கள வகுப்பு ஆரம்பம்

(அராலி)

இலங்கையில் முதன் முறையாக தமிழ் பொலிஸாருக்கு சிங்கள மொழி வகுப்புக்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச ஆரம்பித்து வைத்துள்ளார். வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இந்து பௌத்த கலாசார பேர்வையின் பொதுச் செயலாளர் எம்.டி.எஸ். இராமச்சந்திரனிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் குறித்த வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் கடமையாற்றும் தமிழ் பொலிஸாருக்கு முதற்கட்டமாக சிங்கள மொழியை கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இனிவரும் காலங்களில் சிங்கள பொலிஸாருக்கு தமிழ் மொழியை கற்பிப்பதற்கான நடவடிக்கையை இந்து பௌத்த கலாசார பேரவை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-104)

## பெற்றோலுக்கான டோக்கன் பெற வந்தவர்கள் அலைக்கழிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலுக்கான டோக்கன் பெற வந்தவர்கள் அலைக்கழிந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 746 பேருக்கு பெற்றோலுக்கான டோக்கன் வழங்கப்பட்டு ,டோக்கன் நிறைவடைந்த நிலையில் வரிசையில் நின்ற ஏனையோரது பதிவுகளை இராணுவத்தினர் மேற்கொண்ட பின்னர் டோக்கன் பெற செவ் வாய்க்கிழமை வருகை தருமாறு தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் டோக்கன் பெற நேற்று செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையம் வந்தவர்களை பெற்றோலுக்கான பதிவு நுணாவில் எரிபொருள் நிலையத்தில் தான் இடம்பெறும் எனத் தெரிவித்தனர்.

இதனால் திங்கட்கிழமை நாள் முழுவதும் வரிசையில் நின்றவர்களில் பலர் நுணாவில் செல்ல வாகன வசதி இன்மையால் ஏமாற்றத்து டன் வீடு திரும்பியிருந்தனர். (4-30)

## எதிர்ப்பு தெரிவித்தவர்களுக்கு குளிர்பானம் வழங்கிய கடற்படை



(அராலி)

கடற்படையினருக்கு காணி சுவீகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு கடற்படையினர் குளிர்பானம் வழங்கினர்.

நேற்று காரைநகர் ஜே/45 கிராம உத்தியோகத்தர் பிரிவில் தனியாருக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணியை கடற்படையினருக்கு அளப்பதற்கு நில அளவை திணைக்களத்தினர் வருகை தந்திருந்தனர்.

இதன்போது அங்கு குழுமியிருந்த அரசியல் பிரமுகர்கள், சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் அங்கு குழுமி இந்த காணி அளவீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதன்போது அங்கிருந்த கடற்படை வீரர்கள் அனைவருக்கும் குளிர்பானங்கள் வழங்கினர்.

எனினும் நில அளவை திணைக்களத்தினர் மாத்திரமே குளிர்பானங்களை பெற்றுக் கொண்டனர்.

ஏனைய எவரும் குளிர்பானங்களை பெற்றுக்கொள்ளவில்லை. (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிறியது பேருந்துக்கட்டணம்

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பை தொடர்ந்து பேருந்து கட்டணங்களை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய, ஆகக் குறைந்த கட்டணம் 40 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த 30 சதவீத கட்டண உயர்வு நாளை நள்ளிரவு முதல் அமுலுக்கு வருமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# வெளிநாடு செல்லும் பணிப்பெண்களுக்கு குடும்ப பின்னணி அறிக்கை தேவையில்லை

(கொழும்பு)

வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்ப பின்னணி தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்லும் பெண்கள், தமக்கு 2 முதல் 5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான குடும்பப் பின்னணி அறிக்கையை அவசியம் சமர்ப்பிக்க வேண்டும் எனும் சட்டம் முன்னர் இருந்தது.

இந்தக் கட்டுப்பாடு பெண்களின் தொழில் உரிமைகளை பாதிப்பதாக பல மகளிர் அமைப்புகள் சுட்டிக்காட்டி வந்தன.

வெளிநாடு செல்லும் தகுதிகளைக் கொண்டிராத சில பெண்கள், போலியான குடும்பப் பின்னணி அறிக்கையை சமர்ப்பித்து சட்ட விரோதமான முறையில் வெளிநாடு செல்லும்போது பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, வெளிநாடு செல்வதற்கான தகுதிகளை கொண்டிருந்தும் குறித்த குடும்ப பின்னணி அறிக்கைகளை சமர்ப்பித்த போதிலும், அதிகாரிகள் சில காரணங்களால் அவற்றை தாமதப்படுத்தியதன் விளைவாக, பல பெண்களின் வெளிநாட்டு கனவு தகர்ந்து போயுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு, வேலைவாய்ப்புகளுக்காக பெண்கள், வெளிநாடு செல்லும்போது குடும்பப் பின்னணி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற கட்டாய நிபந்தனையை நீக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (நி)

# என்னால் முடியாவிட்டால் தயங்காது பதவி துறப்பேன்

## தம்மிக்க உறுதி



(கொழும்பு)

“ஆறு மாதங்களே என் இலக்கு. அந்தக் காலப் பகுதிக்குள் முன்னேற்றகரமாக எதையாவது செய்ய முடியாவிட்டால் பதவி துறந்து வீடு செல்வேன்.” என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார். ஊடகம் ஒன்றிற்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எனக்கான காலம் 6 மாதங்கள். நான் வேலை செய்வதற்கான காலம் இது. அந்தக் காலப்பகுதிக்குள் முன்னேற்றகரமாக எதையாவது செய்யா விட்டால் பதவி துறந்து வீடு செல்வேன்.

அத்துடன், தனது பணி இலக்குகளையும் தம்மிக்க பெரேரா பட்டியலிட்டு ஆவணமொன்றை வெளியிட்டுள்ளார். டொலர்களை உள்ளீர்ப்பதற்கான வழிமுறைகளையும் பட்டியலிட்டார்.

வங்குரோத்தடைந்த கம்பனிகளைப் பொறுப்பேற்று, அதனைக் கட்டியெழுப்பும் நிர்வாகத் திறன் உள்ள தனக்கு, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சவாலையும் வெற்றிகொள்ள முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (நி)

# காட்டுச் சட்டங்களால் நாட்டை ஆள முடியாது



(கொழும்பு)

“ஒரு நாட்டை காட்டுச் சட்டங்களால் ஆள முடியாது. அதற்காக ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.”என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

“ஜனநாயக ரீதியான வெற்றிக்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயுள்ள பரப்புகளிலும் தொடர் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் ஊடாக மக்களுக்கான வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்” எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல தரப்பு பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தலைவர்களுடன் நேற்று முன்தினம் எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடத்திய கலந்துரையாடலின்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக, 21 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் ஊடாக ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதே தமது ஒரே நோக்கமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல தரப்பினரும் எதிர்க்கட்சித் தலைவரிடம் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தனர்.

குறித்த சகல முன்மொழிவுகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது உறுதியளித்தார். (நி)

# எரிபொருள் பதுக்கலில் ஈடுபட்ட மூவர் கைது

(கொழும்பு)

பசறை, சுபுகஸ்கந்த, எத்திமலே ஆகிய பொலிஸ் பிரிவுகளில் எரிபொருள் பதுக்கலில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர், அதன்படி பசறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெமேரியா வத்த பகுதி யில் அனுமதிப்பத்திரமின்றி எரிபொருள் பதுக்கி வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 60 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, சுபுகஸ்கந்த் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஹல பியன்வல பகுதியில் சட்டவிரோதமாக எரிபொருள் பதுக்கி வைத்திருந்த ஒருவரிடமிருந்து 460 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் எத்திமலே பகுதியிலும் எரிபொருளை பதுக்கி வைத்திருந்த 60 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 1220 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப் பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (நி)


மணமகன் தேவை

1982 இல் பிறந்த R.C (றோமன் கத்தோலிக்கம்) பூராடம் 1 ஆம் பாதம் உயரம் 5 அடி 2 அங்குலம் உடைய ஆசிரியை மணமகளுக்கு அரச, தனியார் தொழில் புரியும் மணமகன் தேவை

தொடர்புகளுக்கு 0779382868

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 50 சூரி 10 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: Bsc,Msc (லண்டன் சொந்தத்தொழில்) உயரம்:5'6"<br>எதிர்பார்ப்பு: ஆங்கில அறிவுள்ள பெண் விவாகரத்தானவர்.<br>தொ.இ: B/12789 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 3<br>கி.பா:46 சூரி 7 செவ் 3 இல்<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/7262 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: சூரி 6 செவ் 8 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/ தொழில்: கட்டட ஒப்பந்தகாரர் பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: படித்த குணமான பெண். பெண்ணைஅனுப்பும் பொறுப்பு ஆண் பகுதியை சார்ந்தது<br>தொ.இ: B/12790 | பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 3<br>கி.பா: 23 ¼ சூரி 5 செவ் 2 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/ தொழில்: BA,BGDE ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரச.தனியார் தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/11592 |
| பிறப்பு:1981 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி 2<br>கி.பா:23 ½ சூரி .செவ் 2 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: B.com,DO கணக்காளர்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண் தீவு பகுதி வேண்டாம்<br>தொ.இ: B/12791 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா:சூரி 6 செவ் 5 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ:G/10392 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி 1<br>கி.பா: சூரி 9 செவ் 6 இல்<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்: Software Engineer (சிங்கப்பூர்)<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ: B/12792 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: சூரி.செவ் 11 இல்<br>உயரம் :5'8"<br>தகைமை/தொழில்: Audiologist (UK)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ:G/10403 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
...க் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 79

### எந்த வேலையிலும் ஒன்றிப் போவதே வெற்றியின் இரகசியம்



அரண்மனையில், தத்ரூபமான சேவல் ஓவியம் ஒன்றை வைக்க நினைத்தார் மன்னர். மன்னரின் ஆசை, காட்டுத்தீ போல் ஊரெங்கும் பரவியது. எத்தனையோ ஓவியர்கள் வந்தும், மன்னருக்குத் திருப்தியான ஓவியங்களை வரைய வில்லை.

மற்ற நாடுகளில் உள்ள ஓவியர்களுக்காக, ஒரு போட்டி வைத்தார். அவர்கள் வரைந்த ஓவியங்களை, மன்னரின் பார்வைக்கு வைத்தனர்.

சிறு வயதில், தனக்கு ஓவியம் கற்றுக் கொடுத்த வயதான ஓவிய ஆசிரியரை இப்போட்டியின் நீதிபதியாக அறிவித்தார், மன்னர்.

ஓவிய ஆசிரியரிடம், "எல்லா ஓவியங்களையும் பார்த்து, சிறந்த சேவல் ஓவியத்தைத் தேர்வு செய்து விட்டீர்களா..." எனக் கேட்டார் மன்னர்.

"இதில், எந்த ஓவியமும் தகுதியானது இல்லை..." என்றவர், "ஓவியங்கள் வைத்த அறையில், சேவல்களை விடுவோம். தன் இனத்தைச் சேர்ந்த வேறொரு சேவலைப் பார்த்ததும், சண்டை போடத் தோன்றும். எந்த ஓவியத்தைப் பார்த்து, சண்டை போடத் துவங்குகிறதோ, அது தான், மிகச் சிறந்த ஓவியம் என, முடிவு செய்வோம்..." என்றார், ஆசிரியர்.

அறையில் நிறைய சேவல்களை விட கட்டளையிட்டார் மன்னர். ஆனால், ஓவியத்தைப் பார்த்து, சேவல்கள் சண்டை போடாமல், வெளியேறின.

"சண்டைப் போட தூண்டும் சேவல் ஓவியத்தை, நீங்கள் ஏன் வரையக் கூடாது..." என, ஓவிய ஆசிரியரிடம் கேட்டார், மன்னர்.

"உங்கள் சித்தம். ஆனால், எனக்கு ஆறு மாதம் அவகாசம் தேவை..." என்றார், ஆசிரியர்.

"சரி... ஆறு மாதத்திற்குப் பின், இதே அறையில் சந்திப்போம்..." என்றார்.

ஆறு மாதத்திற்கு பின், அதே அறையில் எல்லா ஓவியர்களும் மீண்டும் கூடினர். ஆனால், வயதான ஓவிய ஆசிரியர், கையில் எந்த ஓவியமும் எடுத்து வரவில்லை. இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார் மன்னர்.

"மன்னா... இங்கேயே, அரை மணி நேரத்தில் வரைகிறேன். அதற்கான உபகரணங்கள் எனக்குத் தேவை..." என்று, ஆசிரியர் கூறியதும், அனைத்தும் வந்தன.

மற்ற ஓவியங்களோடு, தான் வரைந்த ஓவியத்தையும் வைத்தார், ஆசிரியர். மீண்டும் அறைக்குள் சேவல்கள் அனுப்பப்பட்டன.


எல்லாரும் ஆவலாக காத்திருக்க, ஆசிரியர் வரைந்திருந்த ஓவியத்தை, நிஜ சேவலாக நினைத்து சண்டைக்குப் போனது, ஒரு சேவல். அப்போட்டியில் வெற்றியும் பெற்றார், ஆசிரியர்.

வயதான ஆசிரியரிடம், "உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன... ஏன், ஆறு மாதம் தேவைப்பட்டது... இருப்பினும், அப்போது எதுவும் வரையாமல், கடைசியில் வரைய ஏன் அரை மணி நேரம் கேட்டீர்கள்..." எனக் கேட்டார், மன்னர்.

"ஆறு மாதமாக, கோழி, சேவல்கள் எப்படி நடக்கிறதோ, தூங்குகிறதோ மற்றும் உணவு உண்கிறதோ, அது போன்றே நானும் நடந்தேன், தூங்கினேன், உண்டேன். அதனுடன் ஒன்றிப் போய், கோழியாகவே மாறி விட்டேன். அதன் பின் தான் சேவல் படத்தை வரைந்தேன்..." என்றார், ஆசிரியர்.

எந்த வேலையிலும், அதில் ஒன்றிப் போவது தான் வெற்றியின் ரகசியம்...

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.



## நேட்டே... மூன்றா... ரஷ்யா எச்ச...

(மொஸ்கோ)

கிரிமியா தீபகற்பத்தில் நேட்டோ உறுப்பு ந... மீதான போர் பிரகடனத்திற்கு சமம். அது ... என்று ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி... சபை துணைத் தலைவருமான டிமிட்ரி மெ...

## கைவிடப்பட்ட லொறியில் 46 சடலங்கள் அமெரிக்கா...


(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் சான் அன்டோனியோ நகரத்தில் கைவிடப்பட்ட லொறியிலிருந்து புகலிடக்கோரிக்கையாளர்கள் என சந்தேகிக்கப்படும் 46 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், உயிருக்கு ஆபத்தான நிலையில் 16 பேர் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டனர்.

மெக்சிக்கோவில் இருந்து அமெரிக்காவிற்கு சட்டவிரோதமாக குடியேற அகதிகள் லொறியில் வந்திருக்கலாம் என பொலிஸார் தெரி...

## ஜோர்தானில் இரசாயனவாயு கசிவு 11 பேர் உயிரிழப்பு, 250 பேர் காயம்



(ஜோர்தான்)

ஜோர்தானின் அகாபா துறைமுகத்தில் குளோரின் இராசாயன வாயு கசிந்ததில் 11 பேர் உயிரிழந்துள்ளதோடு, 250 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான ஜிபூட்டிக்கு 25 தொன் குளோரின் வாயு நிரப்பப்பட்ட கொள்கலன்களை கொண்டு செல்லும்போது கீழே விழுந்ததில் கசிவு ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 199 பேர் இரசாயன பாதிப்புக்குள்ளாகி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதோடு, சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குளோரின் என்பது தொழில் துறை மற்றும் வீட்டு சுத்தம் செய்யும் பொருட்களில் பயன்படுத்தப்படும் ஒரு இரசாயனமாகும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டோ நாடுகளின் அத்துமீறல் ...ம் உலகப் போருக்கு வழிவகுக்கும்

## ...ச்சரிக்கை

**...பு நாடுகளின் எந்த அத்துமீறலும் ரஷ்யாவின் ...து மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும் ...தியும் தற்போதைய ரஷ்யாவின் பாதுகாப்பு ... மெட்வடேவ் எச்சரித்துள்ளார்.**

எங்களைப் பொறுத்த வரை கிரிமியா ரஷ்யாவின் ஒரு பகுதி யாகும். கிரிமியாவை ஆக்கிர மிக்கும் எந்தவொரு முயற்சியும் நம் நாட்டிற்கு எதிரான போர் பிரகட னமாகும் என்று மெட்வடேவ் சர்வதேச செய்தித் தளம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

கிரிமியா தீபகற்பத்தில் நேட்டோ உறுப்பு நாடு ஒன்று அத்துமீறி னால் அது நேட்டோ கூட்டணியு டனான மோதலாக மாறும். இது மூன்றாம் உலகப் போருக்கு வழி வகுக்கும். இதனால் ஒரு முழு மையான பேரழிவு ஏற்படும் எனவும் டிமிட்ரி மெட்வடேவ் தெரிவித்தார்.

பின்லாந்தும் சுவிடனும் நேட் டோவில் இணைந்தால் ரஷ்யா தனது எல்லைகளை வலுப்படுத் தும். எந்தவொரு பதிலடி நடவடி க்கைகளுக்கும் தயாராக இருக் கும்.

அத்துடன் இஸ்கண்டர் ஹைப்பர்சொனிக் ஏவுகணை களை பின்லாந்து, சுவிடன் எல் லைகளில் நிறுத்தும் நிலை ஏற்படும் எனவும் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும் தற் போதைய ரஷ்யாவின் பாதுகாப்பு சபை துணைத் தலைவருமான டிமிட்ரி மெட் வடேவ்எச்சரித்தார்.(நி)

## ...ல் இருந்து ...காவில் மீட்பு

...வித்துள்ளனர். மேலும், லொறியிலி ருந்து அகதிகள் அதீத வெப்பம் மற்றும் மூச்சுத்திணறல் காரண மாக உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர் பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)

## உலகின் மிகப் பெரிய நாணயம் தேடும் பணியில் இந்திய மத்திய அரசு

(டில்லி)

12 கிலோ தங்கத்தால் உருவா க்கப்பட்ட உலகின் மிகப்பெரிய நாணயத்தை தேடும் பணியை இந்திய மத்திய அரசு தீவிரப் படுத்தியுள்ளது.

முகலாய மன்னர் ஜஹாங்கீ ரால் உருவாக்கப்பட்ட அந்த தங்க நாணயம், இறுதியாக ஐதராபாத் நிஜாம்கள் வசம் இருந்த நிலை யில், அதனை சிலர் சுவிஸ் வங்கி யில் ஏலம் விட முயன்றதாக கூறப்படுகிறது.

1987 ஆம் ஆண்டில் அந்த தங்க நாணயத்தை ஜெனிவாவில் ஏலம் விடுவது குறித்து இந்திய அதிகாரிகள், அரசிடம் தெரிவித் ததாகவும், அதற்கு பின் அந்த நாணயம் தொடர்பான விபரங்கள் ஏதும் வெளியாகவில்லை எனவும் வரலாற்று ஆய்வாளர் சல்மா தெரிவித்துள்ளார். (நி)

# உக்ரைனின் வணிக வளாகம் மீது உக்கிர தாக்குதல் நடத்திய ரஷ்யா

## 16 பேர் பலி ✦ 59 பேர் படுகாயம்



(கீவ்)

மத்திய உக்ரைன் கிரெ மென்சுக் நகரில் உள்ள வணிக வளாகம் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக் குதலில் 16 பேர் கொல்ல ப்பட்டனர். மேலும் 59 பேர் படுகாயமடைந்தனர்.

பரபரப்பான வணிக வளாகம் மீது நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரண்டு ரஷ்ய ஏவுகணை கள் வீழ்ந்து வெடித்தன. இதன்போது வணிக வளா கத்தில் 1,000 இற்கும் மேற் பட்டோர் இருந்ததாக உக் ரைன் ஜனாதிபதி வொலோ டிமிர் ஜெலன்ஸ்கி தெரி வித்தார். ஏவுகணை தாக் குதலை அடுத்து வணிக வளாகத்தில் பெரும் தீ பரவல் ஏற்பட்டது. வான த்தை நோக்கி கரும் புகை எழுந்ததாக சம்பவ இட த்தில் இருந்தவர்கள் தெரி வித்துள்ளனர்.

தாக்குதலில் சுமார் 16 பேர் கொல்லப்பட்டனர். 59 பேர் படுகாயமடைந்தனர் என்று உக்ரைன் அவசர சேவை துறை அதிகாரிகள் உறுதி செய்தனர்.

தாக்குதலைத் தொடர்ந்து அங்கு விரைந்த மீட்புக் குழுவினர் மற்றும் தீய ணைப்பு வீரர்கள் காயம டைந்தவர்களை மீட்டு மரு த்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

ரஷ்யாவிடமிருந்து கண் ணியம் மற்றும் மனித நேயத்தை எதிர்பார்ப்பது பயனற்றது என்பதை அப்பாவிகள் மீதான இந்தத் தாக்குதல் காட்டுவதாக உக் ரைன் ஜனாதிபதி ஜெலன் ஸ்கி தனது இன்ஸ்டாகிராம் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ் யாவின் தாக்தலுக்கு முன னர் கிரெமென்சுக் சுமார் 217,000 பேர் வசிக்கும் தொழில் நகரமாக இருந்தது. பொல்டாவா பகுதியில் டினி ப்ரோ ஆற்றை அண்டி அமைந்துள்ள இந்த நகரம் உக்ரைனின் மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு தளமாகும்.

கிரெமென்சுக் நகரில் உள்ள வணிக வளாகம் மீது ரஷ்யா நடத்திய ஏவுக ணைத் தாக்குதலில் பாதிக் கப்பட்டவர்கள் இன்னமும் கட்டட இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என நம்பப்படு கிறது. இந்நிலையில் உயிரி ழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என மத்திய பொல்டாவா பிராந்தியத்தின் ஆளுநரான டிமிட்ரோலு னின் தெரிவித்துள்ளார். இது உக்ரைனிய அப்பாவி மக்களுக்கு எதிரான ரஷ்யா வின் பயங்கரவாதச் செயல். இந்தத் தாக்குதல் இடம் பெற்ற பகுதியின் அருகில் உக் ரைன் இராணுவ இலக் குகள் எவையும் இல்லை என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.(நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உப உணவு செய்கையிலிருந்து விலகும் விவசாயிகள்

(அக்கராயன்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.**

மாவட்டச் செயலகம், விவசாயத் திணைக்களம் என்பன விவசாயிகள் மத்தியில் தொடர்ச்சியாக உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் முல்லைத் தீவு மாவட்டத்தில் விவசாயிகளினால் கட்டுப்படுத்த முடியாதளவிற்கு குரங்குகளினால் உப உணவுப் பயிர்ச் செய்கை அழிக்கப்பட்டு வருகின்றமை மற்றும் கால்நடைகளினால் ஏற்படும் அழிவுகள், உப உணவுப் பயிர்ச் செய்கை காலங்களில் வேலி அடைப்பதற்கு கூடுதலான நிதி தேவைப்படுதல், தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி, இரசாயன உரம் கிடைக்காமை, சந்தை வாய்ப்பின்மை போன்ற பல்வேறு காரணங்களினால் உப உணவுப் பயிர்ச் செய்கையில் இருந்து விவசாயிகள் விலகி வருகின்றனர்.

கடந்த காலத்தில் அறுவடை செய்யப்பட்ட உளுந்து, எள்ளு போன்ற தானிய வகைகளின் விலைகள் குறைவடைந்ததன் காரணமாக இப்பயிர்ச் செய்கையில் இருந்து விவசாயிகள் ஒதுங்கும் நிலை காணப்படுகின்றது. தற்போதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளில் 2,000 கிலோ வரையான உளுந்து, எள்ளு என்பன நியாய விலை கிடைக்காததன் காரணமாக சேமிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-350)

## ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய மஹோற்சவம்

(குப்பிழான்)

உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்தும் பதினைந்து தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவப் பெருந்திருவிழாவில் எதிர் வரும்11 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு சப்பர உற்சவமும், 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் இரவு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)

## நெருக்கடிக்கு தீர்வு காண கோரி

# வவுனியாவில் 25 ஆயிரம் பேரின் கையெழுத்து பெற நடவடிக்கை

(குருமன்காடு)

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண கோரியும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகவும் 25 ஆயிரம் பேரின் கையெழுத்து பெறும் நடவடிக்கை வவுனியாவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பைச் சேர்ந்த க.அருந்தவராசா தெரிவித்தார்.

கடந்த 26 ஆம் திகதி வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது முழு நாட்டிற்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள போதும் வவுனியா மாவட்டம் விவசாயத்தை அடிப்படையகக் கொண்ட மாவட்டம் என்ற அடிப்படையில் கடுமையாக் பாதிப்படைந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள 25 ஆயிரம் மக்களை இலக்காகக் கொண்டு அவர்களின் எதிர்ப்பை பொருளாதார நெருக்கடிக்கு எதிராக அணிதிரள செய்து கையெழுத்து வாங்கும் நடவடிக்கையை நாம் மேற்கொள்ள இருக்கின்றோம்.

இன்று முற்பகல்10 மணிக்கு வவுனியா இலுப்பையடியில் குறித்த நிகழ்வு ஆரம்பமாகும். 25 ஆயிரம் பேரை நோக்கிய எமது இலக்கு முடிவடைந்து பின்னர் எமது வவுனியா மாவட்ட அரச அதிபர் ஊடாக அரசுக்கு வழங்குவதற்கும், இலங்கை தூதுவராலயங்கள் ஊடாக வெளிநாடுகளுக்கும், ஐ.நா.வுக்கும் வழங்கவுள்ளோம்.

இணைந்து செயற்படும் அரசியல் கட்சிகள், அமைப்புக்களின் கடிதங்களையும் பெற்று வழங்கவுள்ளோம். இதற்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களினதும் ஆதரவைக் கோரி நிற்கின்றோம் எனத் தெரிவித்தார். (4-250)

## குரங்குகளை கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளாக விவசாயச் செய்கைக்கு பேரழிவுகளை ஏற்படுத்தி வருகின்ற குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்வில்லை என விவசாயிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாயிகளினால் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருமளவு நிதி செலவழித்து உப உணவு மரக்கறி, பழச் செய்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வரும் நிலையில் மாவட்டத்தில் அதிகரித்துள்ள குரங்குகளினால் பெரும் அழிவுகள் ஏற்படுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்டச் செயலகமோ பிரதேச செயலகமோ நடவடிக்கை எடுக்கவில்லை.

கிளிநொச்சியில் இயங்குகின்ற வன ஜீவராசிகள் திணைக்களம் குரங்குகளை கட்டுப்படுத்துவதில் நடவடிக்கை எடுக்கவில்லை. இதன் காரணமாக பயிர்ச் செய்கைகள் குரங்குகளினால் அழிக்கப்பட்டு வருகின்றன என மேலும் தெரிவித்தனர். (4-350)

## கிளி.முக்கொம்பன் வீதியை புனரமைக்க கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி முக்கொம்பன் வீதியினை தற்காலிகமாக புனரமைப்பதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முக்கொம்பன் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது கந்தபுரத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையான வீதி தற்காலிகமாக புனரமைக்கப்படும் நிலையில் இதன் தொடர்ச்சியாக வயல் வெளி ஊடாக முக்கொம்பன் செல்லும் வீதியில் மூன்று பெருங்குழிகள் காணப்படுகின்றன.

இக்குழிகள் கிரவல் மூலம் நிரப்புவதன் மூலம் தடைப்பட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து யாழ்ப்பாணத்திற்கான பயணத்தினை தொடர முடியும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.(4-350)

## சுகாதார பணிப்பாளர் மீது தாக்குதல் நடத்தியவர் மறியலில்

(கண்டாவளை)

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த சந்தேகநபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்கான எரிபொருட்கள் கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வழங்கப்பட்ட நிலையில் நபரொருவரால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (4-315)

## எரிபொருள் பதுக்குவோரை கண்டறிய புலனாய்வு பிரிவை பயன்படுத்துங்கள்

## செல்வம் எம்.பி. கோரிக்கை

(நெளுக்குளம்)

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை தொந்தரவு செய்யாமல் எரிபொருளை பதுக்கும் மாபியாக்களை கண்டுபிடிப்பதற்கு புலனாய்வு பிரிவினர் முன்வரவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், களவு செய்பவர்களிற்கும், பதுக்குபவர்களுக்கும் தாராளமாக எரிபொருள் கிடைக்க பெறுகின்றது. புனர்வாழ்வு பெற்ற விடுதலை புலி உறுப்பினர்களை இலங்கை புலனாய்வு பிரிவினர் ஒவ்வொரு நாளும் சென்று விசாரணை மேற்கொள்கின்றனர். நான் அவர்களுக்கு ஒன்றை சொல்கிறேன். இவற்றை எல்லாம் இடைநிறுத்திவிட்டு எரிபொருளை பதுக்குபவர்களை கண்டறிவதற்காக இந்த புலனாய்வு உத்தியோகத்தர்களை பயன்படுத்த முடியும் என தெரிவித்தார். (4-299)




டாஸ் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிக்கான அடுத்த ஓராண்டுக்கான ஜப்பான் நாட்டு உதவிக்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது. ஜப்பான் நாட்டின் தூதுவர் மிசுகோஷி கிடேகி குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு, நன்கொடையாளர் சார்பில் ஒப்பமிட்டார்.

(படம்: சப்தசங்கரி, தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியடைந்ததை மீண்டும் நிரூபித்த அரசாங்கம் - அநுரகுமார



(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளிற்கு மாத்திரம் எரிபொருட்களை வழங்குவது என்ற அரசாங்கத்தின் தீர்மானம் காரணமாக பொதுமக்களின் வாழ்க்கை முற்றாக குழப்பமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டதை இது மீண்டும் நிரூபித்துள்ளது எனவும்குறிப்பிட்டுள்ள அவர் நோயாளிகள் மருத்துவமனைக்கு செல்ல முடியாத நிலையும் மாணவர்கள் பாடசாலைகளிற்கு செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது. அனைத்து தொழில்துறையும் முடக்கப்பட்டுள்ளது நாடு முடக்கல் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

விநோதமான முடிவுகளை எடுப்பதற்கு பதில் அரசாங்கம் பதவி விலகவேண்டும் என ஜே.வி.பி.யின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

# இந்தியாவிடமிருந்து அவசரமாக எரிபொருளை பெற முயற்சி

## இந்திய அமைச்சருடன் மிலிந்த மொறகொட பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கையின் அவசர எரிபொருள் தேவைகள் குறித்து இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்தமொறகொட இந்தியாவின் பெற்றோலிய விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியுடன் அவசர பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

அத்தியாவசிய சேவைகளிற்கு மாத்திரம் இரண்டு வாரங்களிற்கு எரிபொருள் வழங்கப்படும் என அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பெற்றோலிய பொருட்கள் வழங்கல் மற்றும் விநியோகிப்பது தொடர்பில் இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து இந்த சந்திப்பில் இலங்கை தூதுவர் எடுத்துரைத்துள்ளார் என இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

கடனுதவி மூலம் எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்காக இந்தியா வழங்கிய உதவிக்காக நன்றி தெரிவித்துள்ள மிலிந்த மொறகொட தற்போது இலங்கைக்குத் தேவையாக உள்ள பெற்றோல் மற்றும் டீசலை அவசர அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து இந்திய அமைச்சருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள உடனடி நெருக்கடிகளிற்கு தீர்வை காண்பதற்கு இந்தியாவும் இலங்கையும் எந்த வழிமுறைகளை பின்பற்றலாம் என்பது குறித்து இருவரும் ஆராய்ந்தனர். (நி)

# 10 நாட்களுக்குள் 4000 கோடி ரூபா அச்சிடப்பட்டுள்ளது

## திஸ்ஸ அத்தநாயக்க



(கொழும்பு)

மத்திய வங்கி கடந்த 10 நாட்களுக்குள் 4000 கோடி ரூபாய் பணத்தை அச்சிட்டுள்ளது.

இவ்வாறு பணத்தை அச்சிடுவதால் நாட்டில் பணவீக்கம் மேலும் மேலும் அதிகரிக்குமே தவிர குறைவடையாது.

நாட்டின் உண்மையான பிரச்சினைகளை அரசாங்கம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி முதல் இம் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் அரசாங்கம் எரிபொருட்களின் விலைகளை தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

மார்ச் மாதத்தில் மாத்திரமே எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை.

பணவீக்கம் அதிகமாகவுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளது.

எரிபொருட்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரிக்கப்பட்டாலும் , எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# எரிபொருள் நெருக்கடியால் உயிரிழந்த சிறுவன்

(புத்தளம்)

கல்பிட்டியில் 12 வயது சிறுவனை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு வாகனம் இல்லாததால் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிறுவனை சைக்கிளில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதிலும் மீட்க முடியவில்லை என பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று முன் தினம் பிற்பகல் தேனீ தீண்டிய சிறுவனை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பல மணித்தியாலங்கள் வாகனங்களுக்கு காத்திருந்த போதிலும் வாகனம் வராத நிலையில் சிறுவனை சைக்கிளில் வைத்து பல மணி நேரம் போராடி அழைத்து செல்ல சிறுவனின் சகோதரன் முயற்சித்துள்ளார். எனினும் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே சிறுவன் உயிரிழந்துள்ளார். (நி)

# தமிழின அழிப்பிற்கு நீதி கோரி

## ஐரோப்பிய ஒன்றிய தலைமையகத்தில் போராட்டம்




(பிரஸ்ஸல்ஸ்)

தமிழின அழிப்பிற்கு நீதி கோரி நேற்று முற்பகல் 11 மணிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரஸ்ஸல்ஸ் தலைமை பணியகத்தின் முன்னால் "உரிமைக்காக எழு" என்ற தொனிப்பொருளில் தமிழர்களின் அறவழி போராட்டம் நடைபெற்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளை சாட்டாக வைத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை திசைதிருப்ப அனைத்துலகமும் அனுமதிக்க கூடாது என்ற கோரிக்கைகள் இந்தப்போராட்டத்தில் முன் வைக்கப்பட்டது. (நி)

# இலங்கையின் ஏற்றுமதி பொருட்களின் விற்பனைக்கு உதவும் சீனா

(கொழும்பு)

சீனாவில் விற்பனை காட்சியகங்களை நிறுவி இலங்கை ஏற்றுமதிப் பொருட்களின் விற்பனைக்கு உதவ சீனா முன்வந்துள்ளது.

சீனாவின் யுவான், சிச்சுவான், பீஜிங் ஆகிய மாகாணங்களில் இலங்கை ஏற்றுமதிப் பொருட்களுக்கான காட்சியகங்களை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அதிகாரிகள், இலங்கைத் தூதுவர் கலாநிதி.பாலித கொஹோனாவிடம் உறுதியளித்துள்ளனர்.

இந்த விற்பனை காட்சியகங்களை நடத்துவதற்குரிய செலவை சீனாவின் அந்தந்த மாகாணங்கள் ஏற்றுக்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனது தயாரிப்புகளுக்கான சீன சந்தையை அணுகுவதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும் என சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கொஹோனா தெரிவித்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 320 |
| உருளைக்கிழங்கு | 280 | 180 | 280 | 300 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 600 | 550 |
| தக்காளி | 600 | 500 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 260 | 240 | 200 | 160 |
| கோவா | 320 | 300 | 350 | 360 |
| கரட் | 200 | 350 | 360 | 400 |
| பூசணி | 180 | 200 | 200 | 200 |
| புடோல் | 140 | 150 | 180 | 280 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 600 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 400 | 400 | 450 | 600 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 240 | 240 | 240 |
| பயற்றங்காய் | 120 | 200 | 240 | 240 |
| லீக்ஸ் | 200 | 250 | 180 | 300 |
| பீற்றூட் | 350 | 280 | 280 | 350 |
| கறிமிளகாய் | 400 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 500 | 400 |
| போஞ்சி | 600 | 450 | 600 | 700 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | — | 300 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60 | 80 |
| தேசிக்காய் | 300 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 75 | 60 | 50-90 |
| இராசவள்ளி | 180 | 350 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | 60 |
| முள்ளங்கி | 160 | 140 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 90 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 50 |
| ஈரப்பலா | — | 150 | — | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# இரு தானங்கள்



(நேற்றைய தொடர்ச்சி)

வெங்கடசாமியும் உள்ளங் கையை காட்டவே அதைப் பார்த்து விட்டு அந்தப் பிராமணர் "உங்கள் கையில் தான ரேகை மிகத் தெளிவாக இருப்பதால் வாழ்நாள் முழுவதும் நீங்கள் தானம் செய்து கொண்டே இருப்பீர்கள், புரோகிதருக்கு நீங்கள் வாக்களித்தபடி விரைவில் பூமி கிடைத்துவிடும்" என்று கூறி ஆசீர்வதித்தார்.

புரோகிதரும் "இவர் வாக்களித்தபடி இவர் எனக்கு பூமியை தானம் கொடுத்தாலும் ஆச்சரியப்பட மாட்டேன். ஆனால் அப்படி நிலம் கிடைத்து விட்டால் என் புரோகிதத் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியாமல் போய் விடுமோ என்று பயமாக இருக்கிறது" என்றார். இதற்குக் கொஞ்ச காலத்திற்குப் பின் வேம்பூர் அருகே ஓடும் நதியில் அணை கட்டப்பட்டு கால்வாய்கள் வெட்டப்பட்டன. இதனால் ஆற்றின் நீர் மட்டம் குறைந்து ஆங்காங்கே மணல் திட்டுகள் தோன்றின. ஒரு காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட அப்பகுதி ஆற்றின் போக்கு மாறியதால் நீரில் அமிழ்ந்து போய்விட்டது. இப்போது நீரோட்டம் இல்லாது போகவே அது நிலப்பரப்பாகியது.

ஒருநாள் அந்த கிராமத்துக் கணக்குப் பிள்ளை வெங்கடசாமியின் வீட்டிற்கு வந்து "ஐயா! உங்களுக்கு அதிர்ஷ்டம்தான்.

ஆற்று நீர் வற்றிய பின் ஏற்பட்ட நிலப் பரப்புகளைப் பற்றி முந்தைய பதிவேடுகளைப் பார்த்தோம். அவற்றில் உங்கள் முன்னோர்களுக்குப் பத்து ஏக்கர் நிலம் சொந்தம் என்று உள்ளது. அதை உங்களிடம் ஒப்படைக்கிறோம்" என்றார். அதைக்கேட்டு வெங்கடசாமி மிக்க மகிழ்ச்சி அடைந்தார். கணக்குப் பிள்ளையை உட்காரச் சொல்லி உபசரித்து உடனே புரோகிதரை அழைத்து வர ஒரு ஆளை அனுப்பினார்.

புரோகிதர் வந்ததும் வெங்கடசாமி கணக்குப் பிள்ளையிடம் "ஐயா! என் தாயார் இறந்தபோது பூதானம் செய்வதாக இவருக்கு வாக்களித்திருந்தேன்.


அதை நிறைவேற்றாமலேயே நான் இறந்து விடுவேனோ என்று இதுநாள் வரை பயந்து கொண்டிருந்தேன். இப்போது நீங்கள் கூறிய நிலத்தை இந்தப் புரோகிதர் பெயருக்கு மாற்றி விடுங்கள்" என்றார்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்

144



அவ் அம்புகளுக்கு ஆற்றாமல் அவர்கள் அயர்ந்து விழுந்தனர்; இலக்குவனும் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தான்: மூச்சுப்பேச்சு அற்று விழுந்தவன் போல் காணப்பட்டான்; போர்க்களமே பிணக்களமாய்க் காட்சியளித்தது.

இந்திரஜித்து தன் தந்தையிடம் சென்று, அயன் படையால் நேர்ந்த அழிவுகளைச் சொல்லி, 'இராமன் ஒருவனைத் தவிர அனைவரும் துறக்கம் புக்கனர்' என்றான்; இலங்கையர்கோன் உள்ளம் பூரித்தான்; 'போர் முடிந்தது' என்று உவந்தான்; 'தனியனான இராமனை இனி எளிதில் சந்திக்க முடியும்' என்று நினைத்தான். இராமன் போர்க்களம் சென்று களம் பட்ட வானரங்களையும், சுக்கிரீவனையும், அனுமன், சாம்பவான் முதலிய படைத் தலைவர்களையும், தம்பி இலக்குவனையும் கண்டான்; 'அனைவரும் மடிந்து விட்டனர்' என்று நம்பிவிட்டான், புலம்பி, நைந்து, செயலிழந்து மயக்கம் [illegible] றான்; செத்தாருள் [illegible] வனாய் மதிக்கப்பட்டான். செய்தி அறிந்து இராவணன் வெற்றிப் படை கொட்டச் செய்து, விழாக் கொண்டாடினான். அரக்கர் பிணம் அத்துணையையும் ஆழ்ந்த கடலில் போடச் செய்து அவர் [illegible] ளுக்கு நினைவுச் சின்னம் எழுப்பி, அஞ்சலி செய்தற்கு அடையாளம் மட்டும் அமைத்துக் கொடுத்தான். சீதைக்குச் செய்தி சொல்ல வைத்து அவள் மங்கல நாண் களைதற்காக மயக்கமுற்ற இராமன் முன் கொண்டு வந்து அவளை நிறுத்தினான்.

"இப்பொழுது என்ன சொல்கிறாய்?" என்ற கேள்விக் கணையை எழுப்பி விட்டான்.

அப்பொழுதும் அவள், அதை முழுமையாய் நம்பவில்லை; உறுதி கொண்ட நெஞ்சினளாய் விளங்கினாள்; 'வானரப்படைகள் படுவதும், இலக்குவன் விழுவதும், இராமன் கண்கலங்கி அழுவதும், உயிர் மாய்த்துக் கொள்வதும் நிகழாதன' என்ற நம்பிக்கை இருந்தது. இராமன் உடம்பில் அடிபட்ட தழும்பு எதுவும் இல்லை, என்பதைத் திரிசடை காட்டினாள்; 'கொண்டது மயக்கமேயன்றி மரணம் அன்று' என்று தெளிவித்தாள். கைதிகளைப் பாதுகாப்பாய்ப் பார்வையிட அழைத்ததைப் போல அழைத்து வந்த சீதை மறுபடியும் சிறைக்காப்பாய் அசோக வனத்தில் அடைக்கப்பட்டாள்.

உணவுப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த வீடணன், காற்றின் போக்கில் செய்தி அறிந்து, களம் வந்து சேர்ந்தான்.

வடு நீங்கிய இராமன் மேனி கண்டு, அவன் இறப்பைப் பற்றிக் கடுகு அளவு ஐயமும் அவனுக்கு எழவில்லை; அரவுக் கயிற்றால் பிணிப்புண்ட நிலையில் கருடன் வந்து காத்தது போல, அயன் அம்பால் தாக்குண்டவர் மயக்கம் தீர சஞ்சீவி மருந்துச் செடி தேவை என்பதை உணர்ந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமும் நன்றே, பூமியும் நன்றே. ஆனால் அவற்றின் இடையேயுள்ள அந்த ஒன்றுதான் கெட்டது.
*– ஸ்பானியப் பழமொழி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்னாசிப்பழத்துக்கு அடுத்து வரப்போவது பலாப்பழம்

நாடாளும் மன்னன் ஒருவருக்கு திடீர் ஆசை ஏற்பட்டது. இதுகாறும் தான் சாப்பிடாத பழம் ஏதும் இருந்தால் அதனைச் சாப்பிட வேண்டும் என்பதே அந்த ஆசை.

உடனடியாக அந்தத் தகவல் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

மக்களைக் கட்டுப்படுத்துவதற்காக நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

மன்னர் பிரான் இதுவரை சாப்பிடாத பழத்தைக் கொண்டு வருபவர்களுக்கு மிகப்பெறுமதியான சன்மானம் வழங்கப்படும்.

அதேநேரம் மன்னர் ஏலவே சாப்பிட்ட பழமாக இருந்தால் அந்தப் பழத்தை யார் கொண்டு வந்தாரோ அவருக்கு அதை அப்படியே முழுமையாகத் தீத்திவிடுவது என்பதாக அந்த நிபந்தனை இருந்தது.

குறித்த அறிவிப்பு வெளியாகியதும் அந்த நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மன்னர் சாப்பிடாத பழம் எதுவாக இருக்கும் என்ற தேடலோடு ஒவ்வொருவரும் தாம் தாம் அனுமானித்ததன்படி பழங்களை எடுத்துச் சென்றனர்.

அரண்மனைக்கு முன்னால் மிக நீண்ட வரிசை. மக்கள் பழங்களுடன் நிற்கின்றனர்.

மன்னர் பிரான் வருகிறார். சேவகர்களும் உடனிருக்கின்றனர்.

மாம்பழம், வாழைப்பழம், தோடம்பழம் என எல்லாமுமே மன்னர் உண்டு சுவைத்த பழங்கள்.

எனவே அந்தப் பழங்களை யார் கொண்டு வந்தார்களோ அவர்களுக்கு அப்படியே தீத்தப்படுகிறது.

வேதனை தாங்க முடியாமல் ஓலக்குரல் எழுப்புபவர்களும் இருந்தனர்.

இதில் ஒருவர் அன்னாசிப்பழம் கொண்டு வந்திருந்தார்.

கெடுகாலம் மன்னர் ஏற்கெனவே அன்னாசிப் பழத்தைச் சாப்பிட்டுள்ளார். உடனே சேவகர்கள் அன்னாசிப்பழத்தை அவரின் வாயில் வைத்துத் திணிக்கின்றனர்.

எனினும் அந்தாள் அடக்கமுடியாமல் சிரிக்கின்றார்.

என்ன சங்கதி வேதனைப்பட வேண்டியவன் சிரிக்கின்றான். காரணம் யாது? என அந்தாளிடம் சேவகர்கள் விசாரிக்க;

அந்த நபர், ஐயா! எனக்குப் பின்னுக்கு ஒருவர் பெரிய பலாப்பழத்துடன் நிற்கிறார். பலாப்பழத்தை மன்னர் ஏலவே சாப்பிட்டுள்ளார்.

அப்படியானால் பலாப்பழம் கொண்டுவந்தவரின் கதி எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தேன். அடக்க முடியாத சிரிப்பு வந்தது என்றார்.

இதை நாம் கூறும்போது இது எதற்கு என்று நீங்கள் கேட்கலாம்.

இப்போது எரிபொருளுக்காகக் காத்து நிற்பவர்களின் வரிசை கண்டு நாம் திகைத்து போகிறோம்.

ஆனால் இது வெறும் அன்னாசிப்பழம் மட்டுமே. பின்னுக்கு பலாப்பழம் வரப்போகிறது.

ஆம், எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு அடுத்தபடியாக உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படப் போகிறது.

ஒரு இறாத்தல் பாணுக்காக பேக்கரிகளுக்கு முன்னால் மிக நீண்ட வரிசையில் பசியோடு காத்திருக்கும் காலம் நெருங்குகிறது.

எனினும் அதுபற்றிய நினைப்பு அறவே இல்லாமல், எரிபொருளுக்கான வரிசையில் நின்று கலாய்ப்பதும் வீதியை மறித்து நின்று பயணிகளுக்கு இடையூறு செய்வதும் குதூகலமான விடயமாயிற்று.

ஓ! பஞ்சம், பசி, பட்டினி என்ற பேரவலம் நம்மைத் துரத்தி வருவதை அறியாதவர்களாக நாம் இருப்பதுதான் வேதனையிலும் வேதனை.

# போதியளவு மருந்து கையிருப்பில் இல்லை

## மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக மக்கள் இந்த நேரத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே, மக்கள் இந்த நேரத்தில் இயலுமான வரை பாதுகாப்பாக இருப்பது முக்கியம் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு உறுப்பினர் டாக்டர் பிரசன்ன கொலம்பகே தெரிவித்தார்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக் காட்டினார்.

தற்போது நாட்டில் போதியளவு மருந்து கையிருப்பில் இல்லை என்று தெரிவித்த அவர், இருக்கும் மருந்துகளின் கையிருப்பு வேகமாக குறைந்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

அலுவலகக் கடமைகள், வீட்டு வேலைகள் போன்றவற்றின் போது விபத்து ஏற்பட்டால், நோயாளிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதும், அது போல வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் பிரச்சினைகள் உள்ளதாக தெரிவித்தார்.

பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மருந்துகள் குறித்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்த அவர், இந்த நேரத்தில் குழந்தைகளை நன்றாகக் கவனித்துக் கொள்வது மிகவும் அவசியம் என்றார். (ம)

### பதிவாளர் திணைக்கள சேவைகள்

## வாரத்தில் இரு நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக அறிவிப்பு

(கொழும்பு)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் சில சேவைகள் மட்டுப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த ஆணைக்குழுவின் அனைத்து பிரதேச மற்றும் மாவட்ட காரியாலயங்களில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்களின் பிரதிகள், காணிப் பதிவு பிரதிகளை வழங்கும் சேவைகள் திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் காலை 8.30 முதல் மாலை 4.30 வரையான காலப்பகுதியினுள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ம)

## அஞ்சல் அலுவலகங்கள் வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் திறக்க தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள போக்குவரத்து சிரமங்களைக் கருத்திற்கொண்டு அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் நிலையங்களை வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் திறக்க அஞ்சல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தபால் திணைக்களத்தின் இந்த திடீர் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணி அவசர பணிப்பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது.

வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே அஞ்சல் அலுவலகங்களை திறப்பதால், சனிக்கிழமை கொடுப்பனவு உள்ளிட்ட தொழிலாளர்களின் உரிமைகளை அஞ்சல் நிர்வாகம் குறைத்து வருவதால் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை 30 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** அக்கரை கெருடாவில், கெருடாவில், மயிலியதனை, பொக்கனை, சந்நிதி கோவில், சிதம்பரா கல்லூரி, தொண்டைமானாறு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** நியூ ஸ்ரீல்பிவிரி லிமிடெட், இரும்பு தொழிற்சாலை, தந்திரிமலைச் சந்தி, (கயசிங்க புர முகாம்), அழகாபுரி (அடப்பங்குளம்), இலுப்பைக்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம் 1 வது பண்ணை, முதலியார் குளம், நேரியகுளம், சின்னக்குளம், சின்ன சிறிபிக்குளம் தந்திரி மலை வீதி, துட்டுவாகை மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுற்றுலாத்துறையில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள்

### அத்தியாவசிய சேவையாக பிரகடனம்

(கொழும்பு)

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா வாகனங்கள் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நேற்று தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தை உறுதிப்படுத்துமாறு தாம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் தகவல் தேவைப்படுவோர் உதவிக்கு சுற்றுலா அவசர தொலைபேசி எண் 1912 அல்லது 0112 43775 மூலம் தொடர்பு கொள்ளலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## வித்தியாசாகரைச் சந்தித்தல்

தட்சிணேசுவரக் காளிகோயிலில் இருந்து புறப்பட்ட வண்டி பாலத்தைக் கடந்து சியாம் பஜார் வழியாக ஆமர்ஷ்ட் வீதியை அடைந்தது. 'பாதுர்பகானை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்' என்று பக்தர்கள் கூறினார்கள். குருதேவர் ஒரு சிறுவனைப் போல் களிப்புடன் பேசிக்கொண்டே வந்தார். ஆமர்ஷ்ட் வீதி வந்ததும் திடீரென்று அவரது நிலையில் மாற்றம் ஏற்பட்டது. அவர் பரவச நிலையில் மூழ்கத் தொடங்கினார்.

வண்டி ராஜாராம் மோகன்ராஜின் மாளிகை வழியாகச் சென்று கொண்டிருந்தது. ம-குருதேவரின் பரவச நிலையைக் கவனிக்காமல் பரபரப்போடு, 'இது தான் ராம் மோகன்ராஜின் வீடு' என்றார். குருதேவருக்கு அது பிடிக்கவில்லை. 'இது போன்ற பேச்சுக்கள் இப்போது பிடிக்கவில்லை' என்றார். அவர் பரவச நிலையில் ஆழ்ந்தார்.

வித்தியாசாகரின் வீட்டு வாசலில் வண்டி சென்று நின்றது. குருதேவர் வண்டியிலிருந்து இறங்கினார். ம-வழிகாட்டியபடி [illegible] வழியாகச் சென்றார். முற்றத்தில் பல்வேறு பூச்செடிகள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 19

பொதுவான வதைமுகாம் கைதிகளைப் போலல்லாமல் ஜெல்லன்பாவின் கைதிகள் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியைப் பெற்றனர் மற்றும் அவர்களது உறவினர்களிடமிருந்து பார்சல்களை அனுப்பவும் பெறவும் முடிந்தது. பண்டேராவும் நிதி உதவி உட்பட OUN-B இலிருந்து உதவி பெற்றார்.

**30 ஜூன் 1941 இல் OUN-B உக்ரைனிய சுதந்திரத்தை லிவிவில் (Lviv) அறிவித்தது. அவ் அரசின் பிரதமராக யாரோஸ்லாவ் ஸ்டெட்ஸ்கோ (Yaroslav Stetsko) அறிவிக்கப்பட்டார். இந்த அறிவிப்புக்கு பதிலடியாக பண்டேரா மற்றும் அவரது கூட்டாளிகள் பலரை கைது செய்ய ஹிட்லர் உத்தர விட்டார்.**

OUN-B மீதான ஜேர்மன் ஒடுக்குமுறையின் விளைவாக, மெல்னிக் கட்டுப்பாட்டில் இருந்த பிரிவு (OUN-M) அதன் போட்டியாளரை (OUN-B) விட ஒரு நன்மையை அனுபவித்தது. அதாவது ஜேர்மன் ஆக்கிரமிப்பின் முதல் மாதங்களில் முன்னாள் சோவியத் உக்ரைனின் சிவில் நிர்வாகத்தில் அக் குழு பல பதவிகளை வகிக்க முடிந்தது.

இக் குழு நிர்வகித்த முதல் நகரம் பழைய சோவியத்-போலந்து எல்லையைத் தாண்டிய பெரிய நகரமான ஜிட்டோமிர் ஆகும். இங்கே, OUN-M ப்ரோஸ்விதா (Prosvita) சமூகங்களின் வளர்ச்சியைத் தூண்ட உதவியது. ப்ரோஸ்விதா என்பது அறிவொளி என்று பொருள்படும். அறிவொளி என்பது உக்ரைனிய கலாசாரம் மற்றும் மக்கள் மத்தியில் கல்வியைப் பாதுகாத்து வளர்ப்பதற்கான ஒரு சமூகமாகும், இது பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆஸ்திரியா-ஹங்கேரி இராச்சியம் கலீசியா மற்றும் லோடோமேரியாவில் உருவாக்கப்பட்டது.

Prosvita உக்ரைனிய மொழி ஒளிபரப்புகளில் உள்ளூர் கலைஞர்களின் தோற்றம், இரண்டு புதிய மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு கல்வி நிறுவனத்தைத் திறத்தல் மற்றும் பள்ளி நிர்வாகத்தை நிறுவுதல் போன்றவற்றைச் செய்தது. இதனால் பல உள்ளூர்வாசிகள் OUN-M இல் சேர்க்கப்பட்டனர்.

OUN-M சோவியத் போர் கைதிகளிடமிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பொலிஸ் படைகளையும் ஏற்பாடு செய்தது. அதன்பின் கீவ்வின் சிவில் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டை OUN-M நிறுவியது. அந்த நகரத்தின் மேயராக வோலோடிமைர் பஹாசி ஒக்டோபர் 1941 முதல் ஜனவரி 1942 வரை இருந்தார். இவர் OUN-M ஐச் சேர்ந்தவர். மேலும் அவர் தனது நிலையை கீவ்வின் காவல்துறையின் மீது OUN-M கட்டுப்பாட்டைக் கொண்டு வர உதவுவதற்குப் பயன்படுத்தினார்.

கீவ்வில் உக்ரைனிய தேசிய கவுன்சில் உருவாக்கப்படுவதையும் OUN-M தொடங்கியது. இது எதிர்கால உக்ரைனிய அரசாங்கத்திற்கு அடிப்படையாக அமையும் எனக் கருதப்பட்டது. இதே நேரத்தில், கீவ்விலிருந்து வெளிவரும் மிகப் பெரிய செய்தித்தாளைக் கட்டுப்படுத்த OUN-M முனைந்தது. அதுமட்டுமல்ல OUN-M ஆல் மத்திய மற்றும் கிழக்கு உக்ரைனிய புத்திஜீவிகளிடமிருந்து பல ஆதரவாளர்களை ஈர்க்க முடிந்தது.

மத்திய மற்றும் கிழக்கு உக்ரைனில் OUN-M இன் வளர்ந்து வரும் வலிமையால் பீதியடைந்த ஜேர்மன் நாஜி அதிகாரிகள், விரைவாகவும், மிருகத்தனமாகவும் அதைத் தகர்த்தனர். 1942 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வோலோடிமைர் பஹாசி மற்றும் எழுத்தாளர் ஒலெனா தெலிஹா உள்ளிட்ட பல உறுப்பினர்களைக் கைது செய்து தூக்கிலிட்டனர்.

OUN-M இன் பல உறுப்பினர்கள் அதே விதியை சந்தித்தனர். மெல்னிக் முகாமில் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் 1944 வரை பெர்லினில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

ஜேர்மன் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்த பண்டேரா மற்றும் மெல்னிக் கைது செய்யப்பட்ட பின்னர், OUN-M உடன் ஒத்துழைத்த, உக்ரைனிய எதிர்ப்புத் தலைவராக இருந்த தாராஸ் டிமிட்ரோவிச் போரோவெட்ஸ் (Taras Dmytrovych Borovets) தலைமையின் கீழ் Polisian Sich நிறுவப்பட்டது. இதேநேரத்தில் உக்ரைனிய கிளர்ச்சி இராணுவம் (UPA) 1943 இல் OUN-B இன் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டது. உக்ரைனிய கிளர்ச்சி இராணுவம் (UPA) உக்ரைனில் இயங்கும் பிற தேசியவாத உக்ரைனிய அமைப்புகளை உள்வாங்கியது.

ஒகஸ்ட் 1943 இல் அதன் (OUN-B) மூன்றாவது மாநாட்டில் பாசிச தேசிய-சோசலிசம் மற்றும் ரஷ்ய போல்ஷிவிசம் இரண்டையும் கண்டித்தது. மேலும் தேசிய சிறுபான்மையினருக்கான உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய கொள்கையை ஏற்றுக் கொண்டது. அதன் முந்தைய நிலைப்பாடு "உக்ரைனியர்களுக்கான உக்ரைன்" என்பதை மாற்றியது. OUN-B யும் தனது கட்டளை கட்டமைப்பை மாற்றி தனிமனிதன் தலைமைக்குப் பதிலாக மூன்று நபர் தலைமையை உருவாக்கியது.

ஜூலை 1944 இல், உக்ரைனிய உச்ச விடுதலை கவுன்சில் அமைக்கப்பட்டது, இதில் பெரும்பாலும் OUN-B உறுப்பினர்கள் இருந்தார்கள். அதற்கு உக்ரைன் தேசியவாதியான ஷூகேவிச் (R.Shukhevych) தலைமை தாங்கினார்.



போரோவெட்ஸ்
தலைவர்
போலிஸ்யன் சிச்



உக்ரேனிய கிளர்ச்சி இராணுவத்தின் காட்டில் தங்குமிடம்

போருக்குப் பிறகு, OUN இன் இரு பிரிவினருக்கும் இடையே மோதல்கள் தொடர்ந்தன. அவர்கள் முதலில் இடம்பெயர்ந்த நபர்களின் முகாம்களிலும், பின்னர், உக்ரைனிய புலம்பெயர்ந்தோரிலும் ஆதிக்கம் செலுத்த போராடினர். இருப்பினும், OUN-M மற்றும் OUN-B இரண்டும் அதன் மையத்தில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உக்ரைனியப் போராட்டத்தையும் சுதந்திர உக்ரைனிய அரசின் விருப்பத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.

உக்ரைனில், OUN இன் பணி மறக்கப்படவில்லை, குறிப்பாக மேற்கு உக்ரைனில், பல ஆண்டுகளாக சோவியத் ஆக்கிரமிப்பு இருந்த போதிலும், ஒரு சுதந்திர உக்ரைனுக்கான கனவு ஒருபோதும் நிறைவேறவில்லை. ஜூலை 1944 இல், உக்ரைனிய உச்ச விடுதலை கவுன் சில் (UNVR) அமைக்கப்பட்டது. இதில் பெரும்பாலும் OUN-B உறுப்பினர்கள் இருந்தார்கள். இச் சபையும் 1950 இல் இல்லாமல் போனது.

**ஜூலை 1944 இல், உக்ரைனிய உச்ச விடுதலை கவுன்சில் (UNVR) அமைக்கப்பட்டது. இதில் பெரும்பாலும் OUN-B உறுப்பினர்கள் இருந்தார்கள். இச் சபை 1950 இல் இல்லாமல் போனது.**

### சாக்சென்ஹவுசன் வதை முகாம் பற்றி சில வரிகள்..

ஜேர்மனியின் ஓரனியன்பர்க்கில் (Oranienburg) உள்ள ஒரு ஜேர்மன் நாஜி வதை முகாமாகும், இது 1936 முதல் மே 1945 இல் நாஜி ஜேர்மனியின் தோல்வி வரை பயன்படுத்தப்பட்டது. இங்கு முக்கியமாக இரண்டாம் உலகப் போரில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் சிறை வைக்கப்பட்டார்கள்.

முக்கிய கைதிகளில் ஜோசப் ஸ்டாலினின் மூத்த் மகன் யாகோவ் துகாஷ்விலி, கொலையாளி ஹெர்ஷல் க்ரின்ஸ்பான், பிரான்சின் பிரதமர் பால் ரெய்னாட், ஸ்பெயின் உள்நாட்டுப் போரின்போது இரண்டாம் ஸ்பானிஷ் குடியரசின் பிரதமர் பிரான்சிஸ்கோ லார்கோ கபல்லரோ, பவேரியாவின் பட்டத்து இளவரசரின் மனைவி மற்றும் குழந்தைகள். உக்ரைனிய தேசியவாத தலைவர் ஸ்டீபன் பண்டேரா மற்றும் பல எதிரி வீரர்கள் மற்றும் அரசியல் எதிர்ப்பாளர்கள் என்போர் அடங்குவர். பல துணை முகாம்கள், ஒரு எரிவாயு அறை மற்றும் மருத்துவ பரிசோதனை பகுதி ஆகியவற்றைக் கொண்ட ஒரு தொழிலாளர் முகாமாக சக்சென்ஹவுசன் இருந்தது. கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டனர், குறைவாக உணவளிக்கப்பட்டனர் மற்றும் வெளிப்படையாக கொல்லப்பட்டனர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, ஓரனியன்பர்க் சோவியத் ஆக்கிரமிப்பு மண்டலத்தில் இருந்த போது, இந்த முகாம் உள்நாட்டு விவகாரங்களுக்கான மக்கள் ஆணையமாகப் பயன்படுத்தப்பட்டது. இன்று, சக்சென்ஹவுசன் ஒரு நினைவுச் சின்னமாக பொது மக்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.

### உக்ரைனிய உச்ச விடுதலை கவுன்சில் (Ukrainian Supreme Liberation Council -UHVR)

முன்னர் கூறியது போல் உக்ரைனிய உச்ச விடுதலை கவுன்சில் (Ukrainian Supreme Liberation Council -UHVR) என்பது 1950 களின் ஆரம்பம் வரை பல்வேறு உக்ரைனிய தேசியவாதிகள் மற்றும் சோவியத் எதிர்ப்பு கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் இருந்த அமைப்பாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

வித்துள்ளார்.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் அரச, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத் தலைவர்களின் சிபாரிசிற்கு அமைவாக அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு ஜூலை 1 முதல் 10ஆம் திகதி வரை குறிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்களுக்கான எரிபொருள் இந்நாட்களில் விநியோகிக்கப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் காத்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். போதுமான எரிபொருள் கிடைக்கும் பட்சத்தில் பொதுமக்களுக்கான எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (ம)

## அனைவருக்கும்...

தாபனம் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

தாம் அனைவருக்கும் எரிபொருளை தொடர்ந்து விநியோகிப்பதாக லங்கா ஐஓசி நிறுவனத்தின் முகாமையாளர் நேற்று தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் எங்களுக்குப் பொருந்தாது. அனைத்து வாகனங்களுக்கும் பற்றுச்சீட்டு முறை மூலம் எரிபொருள் விநியோகிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## இலங்கையின் எரி...

களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எரிசக்தி விவகார இராஜாங்க அமைச்சரும் கட்டார் எரிசக்தியின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சாட் ஷெரிடா அல்-காபியை நேற்று சந்தித்துள்ளேன்.

இதன்போது எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு பெற்றோலியப் பொருட்கள், திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு (LPG), மற்றும் திரவ இயற்கை எரிவாயு (LNG) வழங்குவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு கட்டார் எரிசக்தி மற்றும் கட்டார் அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் இலங்கையின் எரிசக்தி நெருக்கடியை சமாளிக்கும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சர் கூறினார்.

இந்நிலையில், சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட்டுடன் அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று அதிகாலை கட்டார் நோக்கிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நாட்டின்...

யக் கூட்டமைப்பு கலந்துரையாடியுள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை கொக்குவிலிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் சந்தித்தார்.

நேற்று மாலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் தூதுவர் சமகால நிலைமைகள் தொடர்பில் பல்வேறு பட்ட தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கைக்கு...

கொள்ளப்படும் இந்த புதிய உதவிக்கான அறிவிப்பானது தற்போதைய பொருளாதார நெருக்கடியின்போது மிகவும் தேவையுடைய இலங்கையர்களுக்கு வழங்கப்படும்.

இந்த நிதியளிப்பானது எதிர்வரும் 15 மாத காலப்பகுதியில் 800,000 இற்கும் மேற்பட்ட இலங்கைச் சிறார்களுக்கு உணவளிக்கும் ஒரு பாடசாலை ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவி செய்வதையும் மற்றும் 27,000 இற்கும் மேற்பட்ட கர்ப்பவதிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உணவு வவுச்சர்களை வழங்குவதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

இலங்குவில் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய இலங்கை சமூகங்களில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக விவசாய உதவிகள் மற்றும் பணப் பங்களிப்பு ஆகியவற்றின் ஊடாக சுமார் 30,000 விவசாயிகளுக்கு உதவி செய்யவும் இந்த முயற்சி திட்டமிடப்பட்டுள்ளது.

"இலங்கைக்கான மேலதிக உதவியாக 20 மில்லியன் டொலர்களை வழங்குவதாக ஜனாதிபதி பைடனின் இந்த அறிவிப்பானது, உணவுப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் அனைத்து இலங்கை மக்களதும் பொருளாதார நல்வாழ்வு என்பன தொடர்பாக அமெரிக்கா கொண்டுள்ள தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை நிரூபிக்கிறது" என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் கூறினார்.

"பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கு இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவி செய்வதுடன் இந்த உதவியானது, அது மிகவும் தேவைப்படும் சமூகங்கள் மற்றும் சிறார்களை சென்றடைவதை அமெரிக்கா உறுதி செய்யும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## இலங்கையின்...

உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக அயல் நாடான ஆப்கானிஸ்தானிற்கு மனிதாபிமான உதவியாக கோதுமையை அனுப்பி வைத்துள்ளோம். பூகம்பத்திற்கு பின்னர் முதன்முதலில் அவசர உதவிகளை வழங்கியது இந்தியாவே. எங்கள் அயல் நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உதவி வருகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம).

## தொழி...

வரை வாடகை விமானத் தொழிற்பாடுகள் மற்றும் நேர அட்டவணைக்கு அமைய, விமானப் பயணங்களை மேற்கொள்வதற்காக சர்வதேச மற்றும் உள்ளூரில் நிறுவப்பட்டுள்ள விமான நிறுவனங்கள் தற்போது கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இந்த நிலை விமானப் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதற்கான படிமுறைகளை முன்வைத்திருந்தார். (ம)

## நாடு முழுவதும்...

தனியார் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்ததை அடுத்து கொழும்பு உட்பட சன நெரிசல் அதிகமாக காணப்படும் வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

வேலை நாட்களில் கடும் போக்குவரத்து நெரிசல் காணப்படும் தெமட்டகொடை மற்றும் நுகேகொடை பிரதேசங்களில் நேற்று அதிகாலை வாகனங்கள் மிகக் குறைவாகக் காணப்பட்டதுடன் மக்கள் நடமாட்டமும் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருக்கும் சொற்பளவிலான எரிபொருளை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் விநியோகிப்பது என அரசாங்கம் தீர்மானித்தது.

அரசாங்கத்தின் அறிவிப்பு நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளதால், நாடு முழுவதும் வீதிகளில் வாகனப் போக்குவரத்து, மக்களின் நடமாட்டங்கள் வெகுவாக குறைந்துள்ளன. (ம)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1278
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 7 2 2 5 7 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.06.28
சீட்டிழுப்பு இலக்கம் 3042
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 38 52 76 80
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.06.28
சீட்டிழுப்பு இலக்கம் - 830
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 24 46 68 81

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.06.28
சீட்டிழுப்பு இலக்கம் 109
கும்பம் 27 31 35 38 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/06/28
சீட்டிழுப்பு இலக்கம் 4800
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 9 6 4 0 6 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1148
Q 22
வெற்றி இலக்கங்கள் 22 39 58 61

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1775
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.06.28
தினம் செவ்வாய்க்கிழமை
P 42 51 52 56
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,448,780/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.28
சீட்டிழுப்பு இல : 3936
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,832,340/-
வெற்றி இலக்கங்கள் 09 25 36 73
V

சசிறி
சீட்டிழுப்பு வாரம் 189
சீட்டிழுப்பு திகதி 2022.06.28
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 33 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,563,620/-

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்படாத் தொகை ரூ. 4,962,391.20
திகதி 2022-06-28
வெற்றி வாரம் 3487
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 23 33 46 47
கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,970,491.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 36 36 60 66 71
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 951
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2022.06.28
செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 245,234,077/-
தொலை பேசி : 011-2 333 546-47

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1601
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.06.28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,279,420/-
வெற்றி இலக்கங்கள் 18 28 34 58
J


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பாடசாலைகளை தொடர்ந்து நடத்துவது தொடர்பில்

## கல்வி அமைச்சின் செயலாளருடன் ஆளுநர் கலந்துரையாடல்

வடமாகாண பாடசாலைகளை தொடர்ந்து நடத்துவது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரனுடன் ஆளுநர் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் சில தீமானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அவையாவன,

1. நடத்தக்கூடிய கிராமப்புற பாடசாலைகளை வருகை தரக்கூடிய குறைந்தபட்ச ஆசிரியர்களைக் கொண்டு தொடர்ந்து நடத்துதல்.

2. ஏனைய அனைத்துப் பாடசாலைகளிலும் இவ்வாண்டு க.பொ.த சா/த மற்றும் க.பொ.த உ/த பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கான வகுப்புக்களை சமுகமளிக்கக்கூடிய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நடத்துதல்.

3. இவ்விடயம் தொடர்பில் பாடசாலை தமது வலயக்கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடி பொருத்தமான முடிவுகளை எடுக்கலாம்.

4. மாணவர்களின் கல்விக்காக தம்மால் இயன்றளவு ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் தன்னார்வமாக வழங்குமாறு அனைத்து தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தல் போன்ற தீமானங்கள் எடுக்கப்பட்டன. (ம)


பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும்- 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் V2 TRAVELS (C-4121)

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (12012)



டீசல் வகை ஆட்டோ, வடி வாகனம் வாடகைக்குத் தேவை

வட பகுதியில் விநியோகப் பணியில் ஈடுபடுவதற்கு டீசல் வகை சார்ந்த ஆட்டோ மற்றும் வடி வாகனம் வாடகைக்குத் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்.

076 097 3127


# தீக்காயத்துக்குள்ளான 19 வயது யுவதி மரணம்

(கொழும்பு)

ஹோமாகம மாகம்மன பிரதேசத்தில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் கடுமையான தீக்காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யுவதி உயிரிழந்துள்ளார்.



கடந்த 25 ஆம் திகதி இந்த தீ விபத்து இடம்பெற்றிருந்த நிலையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை மற்றும் இரண்டு மகள்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இதில் தாய் மற்றும் தந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நிலையில் ஒரு மகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் மற்றைய மகள் கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 19 வயதுடைய யுவதி நேற்று மதியம் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த யுவதியின் தாய், தந்தையின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (திறமைகளுக்கு உட்பட்டது)

✓ வயது-22 தொடக்கம் 35

✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4121)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



வாகன சாரதி தேவை

பொருட்களை ஏற்றி இறக்கக் கூடிய சாரதி தேவை.

வேதனம் : 1,500/= மேல்

தொடர்புகளுக்கு

070 713 0839 (12011)



# அறிவித்தல்

1927.11.06ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் K. V. சின்னத்துரை அத்தாட்சிப்படுத்திய 285 ஆம் இலக்க உறுதிக்கு உட்பட்ட "ஆலாத்திவெளி தென்னம் தோட்டம்" என்ற நாமமுடைய நாவற்குழி பாலத்திற்கு அண்மையில் அமைந்த 26 ஏக்கர் 1 றூட் 18 1/2 பேச் விஸ்தீரணம் கொண்ட ஆதனம் அதன் மூல சொந்தக்காரான வேலாயுதர் முத்துக்குமாரு ராசாவிடமிருந்து 03.01.2011 ஆம் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் கே. பிரபாகரன் அத்தாட்சிப்படுத்திய 316 ஆம் இலக்க அறுதிச் சாதனத்தால் மிஸ்ரிக் மிஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் கொள்முதல் செய்து சொந்தக்காரரும் ஆட்சியாளருமாக இருந்து வருகின்றது.

மோசடியை தவிர்ப்பதற்கும் பொது மக்கள் நன்மை கருதியும் குறித்த ஆதனத்தை அல்லது அதன் பகுதியினை குறித்த கம்பனி தவிர்ந்த வேறு எவரிடமும் கொள்வனவு எவராவது செய்தால் அல்லது உரித்து மாற்றம் செய்யின் அதற்கு கம்பனி பொறுப்பாகமாட்டாது என்பதுடன் தோதான நீதிமன்றில் மோசடி விற்பனை, கொள்முதல் செய்பவர்கள் மீது வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்

வரைபு :
A. Rajaratnam, LL.B.
ATTORNEY - AT- LAW & N.P
Commissioner for Oatns
Senguntha Veethy, Thirunelvely East,
Jaffna.

மிஸ்ரிக் மிஷன் (பிறைவேட்) லிமிட்டெட்,
நிர்வாகி

(12010)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.